<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மதுராந்தகம்</u>

முன்னிலை : செல்வி. பா.பவ்யா, **B.A, L.L.B.,**

நீதித்துறை நடுவர் எண்.2, மதுராந்தகம்

2026 ஆம் ஆண்டு மார்ச் 27–ம் நாள் வெள்ளிக்கிழமை

2057 திருவள்ளுவராண்டு, விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 13–ம் நாள்

<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்: 576/2025</u>

அரசுக்காக.
காவல் உதவி ஆய்வாளர்,
அச்சிறுப்பாக்கம் காவல் நிலையம்,
காவல் நிலைய குற்ற எண்.207/2025 ........ குற்றமுறையிடுபவர்

– எதிர் –

A1–வேலாயுதம், வயது 38, த/பெ.மாரிமுத்து,
மினி டேங்க் தெரு,
மேட்டுக் கொளத்தூர் கிராமம் மற்றும் அஞ்சல்
செய்யூர் தாலுக்கா
செங்கல்பட்டு மாவட்டம்.

A2–பிரியா வயது.26 க/பெ.யுவராஜ்.
23A, மாரியம்மன் கோவில் தெரு,
மேட்டுக் கொளத்தூர் கிராமம் மற்றும் அஞ்சல்
செய்யூர் தாலுக்கா
செங்கல்பட்டு மாவட்டம்.

........ எதிரிகள்

| | | |
|---|---|---|
| 1. | Name of the Court | Judicial Magistrate No. II, Madurantakam. |
| 2. | Name of the Judge | Selvi. B.Bavya, , B.A., L.L.B., |
| 3. | Date of Judgment | 27.03.2026 |
| 4. | Case Number along with CNR Number | CC. 576/2025<br>TNCG15-002929-2025 |
| 5. | Name of the Parties of the case | State Govt,<br>Sub Inspector of Police, Acharapakkam PS.<br>**Complainant** |
| | | A1–வேலாயுதம், வயது 38, த/பெ.மாரிமுத்து,<br>A2–பிரியா வயது.26 க/பெ.யுவராஜ்.<br>**Accused** |
| 6. | Date of Occurrence | 14.08.2025 |
| 7. | Date of Complaint | 15.08.2025 |
| 8. | Date of Arrest if any and remand | A1 remanded to Judicial Custody on 16.08.2025 |

<table>
<tr><td>9.</td><td>Period of Remand of the Accused</td><td>-----</td></tr>
<tr><td>10.</td><td>Date of release on bail</td><td>A1 released on 23.08.2025</td></tr>
<tr><td>11.</td><td>Date of Final Report</td><td>05.11.2025</td></tr>
<tr><td>12.</td><td>Date of Committal of the case to the Court of Sessions</td><td>-------</td></tr>
<tr><td>13.</td><td>Date of Questioning of the accused U/s. 316 Bharatiya Nagarik Suraksha Sanhita</td><td>03.03.2026</td></tr>
<tr><td>14.</td><td>Date of Examination in Chief and Cross Examination of the Witnesses</td><td>
<table>
<tr><th>Witness</th><th>Chief</th><th>Cross</th></tr>
<tr><td>PW1</td><td>03.03.2026</td><td>03.03.2026</td></tr>
<tr><td>PW2</td><td>03.03.2026</td><td>03.03.2026</td></tr>
<tr><td>PW3</td><td>03.03.2026</td><td>03.03.2026</td></tr>
<tr><td>PW4</td><td>03.03.2026</td><td>03.03.2026</td></tr>
<tr><td>PW5</td><td>12.03.2026</td><td>12.03.2026</td></tr>
</table>
</td></tr>
<tr><td>15.</td><td>Date of filing of all miscellaneous petitions and their results including the results on Challenge before the Superior Courts except routine petitions like petition U/s. 355 BNSS</td><td>------</td></tr>
<tr><td>16.</td><td>Date of Examination of the Accused U/s.351 of BNSS Act</td><td>18.03.2026</td></tr>
<tr><td>17.</td><td>Details of abscondence of an accused and his appearance / production as the case may be</td><td>Nil</td></tr>
<tr><td>18.</td><td>Grant of Stay by Superior Courts and the results there of</td><td>------</td></tr>
<tr><td>19.</td><td>Date of Commencement of Trial</td><td>03.03.2026</td></tr>
<tr><td>20.</td><td>Date of Closure of Trial</td><td>23.03.2026</td></tr>
<tr><td>21.</td><td>Date of Sentence of Order</td><td>27.03.2026</td></tr>
<tr><td>22.</td><td>Date of Service of Copy of Judgment to the Accused</td><td>------</td></tr>
<tr><td>23.</td><td>If any delay, give Explanation</td><td>------</td></tr>
</table>

****

இவ்வழக்கானது 30.12.2025 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் ஆண்டுபட்டிகை வழக்கு எண் 576/2025 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக 27.03.2026–ஆம் தேதியன்று என்முன்பாக விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.R.திருமலை, திரு.A.சீனிவாசன் மற்றும் திரு.M.சுரேஷ்பாபு அவர்கள் முன்னிலையாகியும் ஏற்று நடத்திய இவ்வழக்கில்

வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

**1.** இவ்வழக்கானது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 296(b), 118(1), 118(2), 351(3) r/w 4 of TNPHW Act–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டதை கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

**குற்றமுறையீட்டின் சுருக்கம்:**

**2.** இவ்வழக்கில் சாட்சி–3 சுசீலா மற்றும் சாட்சி–4 சகுந்தலா இருவரும் சேர்ந்து வாங்கிய லோன் பணத்தை திரும்ப கட்டுவதற்காக சாட்சி–3 சுசீலா என்பவர் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு சாட்சி–5 யுவராஜ் என்பவரிடம் சென்று பணம் கேட்டுதற்கு 2ம் எதிரி பிரியா என்பவர் சாட்சி–3 சுசீலா என்பவரை அசிங்கமாக பேசியுள்ளார். சாட்சி–5 யுவராஜ் காசு ரெடி பண்ணி தருவதாக சொன்னதற்கு 2ம் எதிரி பிரியா என்பவர் சாட்சி–3 யிடம் பிரச்சனை செய்து தகராறு செய்துள்ளார் இதன் தொடர்ச்சியாக 14.08.2025ம் தேதி இரவு சுமார் 8.00 மணியளவில் சாட்சி–1 பூங்கோதை சாட்சி–2 ஞானப்பன் சாட்சி–3 சுசீலா மற்றும் சாட்சி–4 சகுந்தலா ஆகியோர் வீட்டில் இருந்தபோது 2ம் எதிரி பிரியா மற்றும் 1ம் எதிரி வேலாயுதம் இருவரும் சேர்ந்து வந்து சாட்சி–3 சுசீலா என்பவரிடம் என்ன பணத்தகராறு என்று கேட்டதற்கு சாட்சி–3 சுசீலா விவரங்களை சொல்லிக் கொண்டிருந்தபோது 2ம் எதிரி பிரியா என்பவர் அந்த தெவிடியாவின் பேச்சை ஏன் கேட்டுக்கிட்டு இருக்க அவளை அடித்து சாவடி என்று சொல்ல எதிரிகள் இருவரும் சேர்ந்து அசிங்கமாக பேசி 1ம் எதிரி வேலாயுதம் என்பவர் கட்டையால் சாட்சி–2 தலையில் அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியும், மடக்க வந்த சாட்சி–1 பூங்கோதை என்பவரை ஒரு பெண் என்றும் பாராமல் தெருவில் வைத்து அதே கட்டையால் வாயில் குத்தியுள்ளார் அதில் சாட்சி–1 பூங்கோதை என்பவருக்கு பல் உடைந்து உதடு கிழிந்து கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது. 1 மற்றும் 2ம் எதிரிகள் இருவரும் சேர்ந்து சாட்சிகள் ஞானப்பன் மற்றும் சுசீலா ஆகியோரை பார்த்து இனிமேல் லோன் காசு கேட்டு வீட்டுபக்கம் வந்தா இந்த கட்டையால் அடித்து சாவடித்திடுவோம்

என கொலை மிரட்டல் செய்து குற்றம் புரிந்துள்ளார். எனவே, எதிரிகள் பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 296(b), 118(1), 118(2), 351(3) r/w 4 of TNPHW Act–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்றமுறையிடுபவர் தரப்பில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** குற்ற இறுதி அறிக்கையை பெற்று வழக்கினை 30.12.2025ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரி முன்பிணையில் சென்றுள்ளதால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரி ஆஜரானதன் பேரில் பிரிவு 230 BNSS–ன் கீழ் குற்றப்பத்திரிகை மற்றும் வழக்கின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசத்திற்கு பின் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரி குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 296(b), 118(1), 118(2), 351(3) r/w 4 of TNPHW Act–ன் கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து எதிரிகளுக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டது. அதற்கு எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார். எனவே அரசு தரப்பில் சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4.** இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகளோ அல்லது சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை. இவ்வழக்கில் சா.பொ.ஆ.1 ஆக மரக்கட்டை குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு.

**<u>அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

**5.** அரசு தரப்பில், அ.சா.1 பூங்கோதை என்பவர் அவரது சாட்சியத்தில் தான் தற்போது மேட்டுகொளத்தூரில் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், தான் கடந்த 26.01.2025ம் தேதி செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் தனக்கு உடல் நிலை சரியில்லாததால் சிகிச்சையில் இருந்த போது போலிசார் தன்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், போலிஸார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 அரசு தரப்பில் இருந்து பிறழ்ந்து பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

**6.** இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்து வரும் அ.சா.5 தியாகராஜன் என்பவர் தனது சாட்சியத்தில் கடந்த 16.08.2025 ம் தேதி காலை 11.45 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.தெய்வராஜன் என்பவரிடம் பூங்கோதை என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று பதிவு செய்து வைத்திருந்த மனு ரசீது எண் 973/2025 ரசீதை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட தான் அந்த புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 207/2025 BNS பிரிவுகள் 296(b), 118(1), 351(3), மற்றும் 4 of TNPHW Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் விமலா மற்றும் உஷா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் என்றும், அன்றைய தினம் மதியம் 12.45 மணிக்கு எதிரிகள் வாதியை தாக்கிய கட்டையை வாதியின் வீட்டின் அருகே எதிரிகள் விட்டு சென்றதை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கட்டையை கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன் என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு

செய்தேன் என்றும், எதிரிகளை தேடிவந்த நிலையில் 16.08.2025 ம் தேதி மதியம் 1.00 மணிக்கு எதிரியின் வீட்டின் அருகே வேலாயுதம் என்ற எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன் என்றும், மற்றொரு எதிரியை தேடிவந்த நிலையில் எதிரி பிரியா என்பவர் செங்கல்பட்டு அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவரை கைது செய்யவில்லை என்றும், பின்னர் வழக்கில் காயம் பட்ட பூங்கோதை மற்றும் ஞானப்பன் விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று வழங்கிய மருத்துவர் கயல்விழி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்னர் வழக்கு சொத்தினை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், பின்னர் வழக்கில் காயம் பட்ட பூங்கோதை என்ற நபருக்கு மருத்துவர் கொடுங்காயம் என்று சான்று வழங்கியதால் வழக்கின் சட்டப்பிரிவான BNS பிரிவுகள் 296(b), 118(1), 351(3) மற்றும் 4 of TNPHW Act இருந்து BNS பிரிவுகள் 296(b), 118(1), 118(2), 351(3) மற்றும் 4 of TNPHW Act ஆக மாற்றி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன் என்றும், பின்னர் விசாரணை முடித்து எதிரிகள் மீது BNS பிரிவுகள் 296(b), 118(1), 118(2), 351(3) மற்றும் 4 of TNPHW Act கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**7.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் 351(1)(ஆ)BNSS–ன் கீழ் வினவிய போது எதிரிகள் அதனை மறுத்து கூறினார். எதிரிகள் தரப்பில் சாட்சிகளோ சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**8.** இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய அம்சம் என்னவென்றால் அரசு தரப்பில் எதிரி மீது வனையப்பட்டுள்ள பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 296(b), 118(1), 118(2), 351(3) r/w 4 of TNPHW Act–ன் கீழான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

## <u>தீர்வு :-</u>

**9.** பாரதிய சாட்சிய அதினியம் பிரிவு 104 ன் படி எதிரிக்கு எதிரான இவ்வழக்கினை நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பை சேர்ந்ததாகும். இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்க அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கபட்டு அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யபட்டுள்ளன. அரசு தரப்பில் சா.பொ.ஆ.1 ஆக கட்டை ஒன்று குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 296(b), 118(1), 118(2), 351(3) r/w 4 of TNPHW Act-ன் கீழான குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிகளின் சாட்சியங்களின் மூலம் எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பினால் நிரூபிக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதே ஆகும்.

**10.** அ.சா.1 பூங்கோதை என்பவர் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். அவர் கொடுத்ததாக சொல்லப்படும் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 யைப் பரிசீலிக்கையில் தனது அம்மா சுசீலா மற்றும் தனது அத்தை சகுந்தலா இருவரும் சேர்ந்து வாங்கிய லோன் பணத்தை திரும்ப கட்டுவதற்காக கடந்த இரண்டு நாட்களுக்கு முன் தனது தம்பி யுவராஜ் என்பவரிடம் சென்று பணம் கேட்டார்கள் என்றும், அதற்கு தனது தம்பி மனைவி பிரியா அசிங்கமாக பேசியுள்ளார் என்றும், தனது தம்பி யுவராஜ் காசு ரெடி பண்ணி தருவதாக சொன்னார் என்றும், அதற்கு தனது தம்பி மனைவி பிரியா தனது தாயாரிடம் பிரச்சனை செய்து தகராறு செய்தார் அதன் தொடர்ச்சியாக 14.08.2025 தேதி இரவு 08.00 மணி அளவில் தான் தனது தந்தை ஞானப்பன், தாயார் சுசீலா மற்றும் தனது அத்தை சகுந்தலா ஆகியோர் வீட்டிலிருந்த போது பிரியா மற்றும் அவரது உடன் பிறந்த அண்ணன் வேலாயுதம் இருவரும் தங்கள் வீட்டுக்கு அருகே வந்து வேலாயுதம் என்பவர் தனது அம்மாவிடம் என்ன சண்டை என்று கேட்டார் அதற்கு தனது அம்மா விவரங்கள் சொல்லிக் கொண்டிருந்தார் என்றும், அப்பொழுது தனது தம்பி மனைவி பிரியா அவரது அண்ணனிடம் "அந்த தேவிடியாவிடம் என்ன பேச்சு கேட்டு இருக்க

அவளை அடித்து சாவடி" என்று சொல்லி பிரியா வேலாயுதம் இருவரும் சேர்ந்து எங்களை அசிங்கமாக பேசி வேலாயுதம் என்பவர் தடியால் தனது அப்பாவின் தலையில் அடித்தார் என்றும், மடக்கச் சென்ற தன்னையும் கட்டையால் வாயில் குத்தினார் என்றும், மடக்க வந்த தனது அம்மா, அத்தையையும் அடிக்க வந்ததாகவும், அதில் தனக்கு வாயில் பலத்த ரத்த காயம் ஏற்பட்டு ஒரு பல் உடைந்து உதட்டில் ரத்த காயம் ஏற்பட்டது என்றும், தனது அப்பாவிற்கு தலையில் பலத்த ரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், பிரியா மற்றும் அவரது அண்ணன் இருவரும் தன்னையும், தனது அப்பா, அம்மா ஆகியோரை பார்த்து "இனிமேல் லோன் காசு கேட்டு வீட்டு பக்கம் வந்தா இந்த தடியால் அடித்து சாவடித்து விடுவோம்" என மிரட்டினார்கள் என்று புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. ஆனால், அவரது நீதிமன்ற முதல் விசாரணையில் தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், மேற்படி கையொப்பத்தை கடந்த 26.01.2025 ம் தேதி செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் தனக்கு உடல் நிலை சரியில்லாததால் சிகிச்சையில் இருந்த போது போலிசார் தன்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி, 14.08.2025 ம் தேதி சம்பவம் நடந்ததாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வரும் நிலையில் புகார்தாரர் தான் 26.01.2025 ம் தேதி மருத்துவமனையில் இருந்து பொழுது போலீஸார் தன்னிடம் கையொப்பம் வாங்கியதாக குறிப்பிட்டு மேற்படி புகாரில் உள்ள சங்கதிகளை ஒத்துரைத்து சாட்சியம் அளிக்காததாலும், இவ்வழக்கின் புகார்வாக்குமூலம் அ.சா.ஆ.3 ல் உள்ள சங்கதிகள் குறித்த நியாயாமான சந்தேகம் இந்நீதிமன்றத்திற்கு எழுகிறது. மேற்படி அ.சா.1 யை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்த பொழுதும் எந்த வித முரண்பாடும் வெளிக்கொணரப்படவில்லை.

**11.** மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.9 ல் பூங்கோதை என்பவர் 18.05.2025 தேதியில் இரவு 11 மணிக்கு அன்றிரவு 8 மணியளவில், தனக்கு தெரிந்த 4 நபர்கள் மேற்படி அவரை தாக்கியதில் மேல் மற்றும் கீழ் உதடுகளில் சிறாய்ப்பு காயம் ஏற்பட்டும் இரண்டு பற்கள்

உடைந்து சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாகவும், அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை கொடுங்காயம் என்று சான்றளிக்கப்பட்டுள்ளது என்பது புலப்படுகிறது. ஆனால், அவரது சாட்சியத்தில் தனக்கு உடல்நிலை சரியில்லாததால் 26.1.2025 ம் தேதி தான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்ததாக கூறியுள்ளார். மேலும், அரசு தரப்பில் வேலாயுதம் என்ற நபர் மேற்படி புகார்தாரர் அ.சா.1 யை தாக்கியதாக கூறப்பட்டுள்ள நிலையில், மேற்படி அ.சா.ஆ.9 ல் அவரை 4 நபர்கள் தாக்கியதாக முரண்பட்டு குறிப்பு உள்ளது. எனவே, மேற்கண்ட காரணங்களினால் மேற்படி விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.9 ன் நம்பத்தன்மையைக் குறித்து சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

**12.** இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட மற்றும் கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள ஞானப்பன் அ.சா.2 அவரது சாட்சியத்தில் ஆஜர் எதிரிகளைத் தனக்கு தெரியாது என்றும், தான் ஒரு நாள் கழனிக்கு சென்று விட்டு வீட்டுக்கு வரும் பொழுது சண்டை நடந்தது என்று கேள்வியுற்றதாகவும், வழக்கு பற்றி தனக்கு வேறு எதுவும் தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள விபத்து பதிவெடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.8 யை பரிசீலிக்கையில், ஞானப்பன் என்பவர் கடந்த 14.08.2025 ம் தேதி இரவு 11 மணியளவில், அவருக்கு தெரிந்த ஒரு நபர் அவரை இரவு 8 மணியளவில் மேட்டுக்கொளத்தூரில் தாக்கியதாக அனுமதிக்கப்பட்டதாகவும், அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று சான்று வழங்கப்பட்டதாக குறிப்பு உள்ளது. மேற்படி அ.சா.2 அவரை தெரிந்த நபர் தன்னை தாக்கியதாக கூறியுள்ள நிலையில், மேற்படி அவரது சாட்சியத்தில் எதிரிகளைத் தனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளதால், மேற்படி, அவருக்கு ஏற்பட்ட காயம் எதிரிகளின் குற்றச்செய்கையால் தான் ஏற்பட்டதா என்ற சந்தேகம் எழுகிறது.

**13.** மேலும் இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.3 சுசீலா மற்றும் அ.சா.4 சகுந்தலா என்பவரும் வழக்கு குறித்து தங்களுக்கு எதுவும்

தெரியாது என்று கூறி பிறழ் சாட்சியம் அளித்துள்ளனர். மேற்படி சாட்சிகள் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்த போதும் எவ்வித முரண்பாடும் வெளிகொணரபடவில்லை.

**14.** மேலும், இவ்வழக்கில் புகார்தாரர் அ.சா.1 அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ள நிலையில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி திரு.தியாகராஜன் என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, புலன்விசாரணை செய்து, இறுதி அறிக்கை தாக்கல் செய்தது அளித்துள்ள சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**15.** மேலும், அரசு தரப்பில் முன்னிருத்தபட்ட அ.சா.1 எதிரியுடன் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் பேசி முடித்து கொண்டதாக கூறி பிரிவு 359(3) BNSS–ன் கீழ் மனுதாக்கல் செய்த மனு C.M.P.NO.197/2026–ல் கோப்பிற்கு எடுக்கபட்டதில் இவ்வழக்கின் குற்றப்பிரிவுகள் சமரசம் செய்து கொள்ளமுடியாத குற்றங்கள் என்பதால் அம்மனு தள்ளுபடி செய்யபட்டுள்ளது.

**16.** இவ்வழக்கில் எதிரியுடன் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் பேசி முடித்து கொண்டதாக தாக்கல் செய்த மனுவை வைத்து பார்க்கும் போது, மாண்புமிகு உச்சநீதிமன்றம் Central Bureau of Investigations Vs Sadhu Ram Singh Reported in 2017(1) MLJ Crl724 SC என்ற வழக்கில் Continuance of Criminal Proceedings after compromise has been arrived between complainant and accused, would amount to abuse of process of court and futility – Trial would be prolonged and it may end in which may be of no consequence to any parties என்று கூறியுள்ளதை கவனத்தில் எடுத்துக் கொள்வது அவசியமாகிறது. இந்த முன் தீர்ப்பின் அடிப்படையில் இருதரப்பினரும் சமாதானமாக சென்ற நிலையில் இவ்வழக்கினை தொடர்வது அனாவசியமானது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**17.** மேற்கண்ட முரண்பாடுகளால், அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் அரசு தரப்பு சான்றாவணங்களையும் ஒப்பிட்டு பரிசீலித்து பார்க்கும் போது, புகாரில் கண்டுள்ள சங்கதிகளை ஒத்து வலியுறுத்தி எதிரிகள் தான் பொது இடத்தில் வைத்து மற்றவர்கள் முன்னிலையில் அருவருக்கத்தக்க வகையில் ஆபாசமான வார்த்தைகளை மொழிந்து பெண்மையை இழிவுப்படுத்தும் வகையில் நடந்துக் கொண்டதாகவோ, அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ ஆபத்தான ஆயுதங்களினால் தாக்கி அ.சா.1 க்கு கொடுங்காயம் மற்றும் அ.சா.2 க்கு சொற்பகாயம் ஏற்படுத்தி அவர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தாகவோ சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை என்பது தெரிய வருகிறது. எனவே, பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 296(b), 118(1), 118(2), 351(3) r/w 4 of TNPHW Act–ன் கீழான கூறுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**18.** எனவே முடிவாக, மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையிலும், இந்த வழக்கின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபணமாகததால் எதிரிகள் பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 296(b), 118(1), 118(2), 351(3) r/w 4 of TNPHW Act–ன் படியும் தண்டிக்கப்படத்தக்க குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை பிரிவு 271(1) BNSS–ன் கீழ் அக்குற்றசாட்டுகளிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**19.** இவ்வழக்கில் சா.பொ.ஆ.1 கட்டை ஒன்று குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் மேற்படி வழக்கு சொத்து அழிக்க உத்தரவிடப்படுகிறது.

**20.** இந்த வழக்கு விசாரணை நிலுவையில் இருந்த போது எதிரிகள் பிணையில் சென்றிருந்தால், மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் எழுதிக் கொடுத்த பிணைப்பத்திரம் ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 27-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

BAVYA BALU

Judicial Magistrate No. II
Digitally signed by BAVYA BALU
Location: Madurantakam
Date: 2026.03.27 18:50:27 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
மதுராந்தகம்.

அரசு தரப்புச் சாட்சிகள்:

| | |
|---|---|
| அ.சா.1 | பூங்கோதை, க/பெ.அரவிந்த்ராஜ் |
| அ.சா.2 | ஞானப்பன், த/பெ. கிருஷ்ணன் |
| அ.சா.3 | சுசீலா, க/பெ.ஞானப்பன் |
| அ.சா.4 | சுகுந்தலா க/பெ.சுப்பிரமணி |
| அ.சா.5 | தியாகராஜன் த/பெ.முருகன் |

அரசு தரப்புச் சான்றாவணங்கள்:

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் | அ.சா.1 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.2 | மனு ரசீது | அ.சா.5 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.3 | புகார் வாக்குமூலம் | அ.சா.5 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.4 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.5 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.5 | பார்வை மகசர் | அ.சா.5 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.6 | மாதிரி வரைபடம் | அ.சா.5 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.7 | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.5 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.8 | விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று | அ.சா.5 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.9 | விபத்து பதிவேடுடன் | அ.சா.5 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | கூடிய காயச்சான்று | |
| அ.சா.ஆ.10 | படிவம் 91 | அ.சா.5 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.11 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.5 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |

அரசு தரப்புச் சான்றுப்பொருள் : ச.பொ.ஆ.1 ஆக கட்டை ஒன்று குறியீடு செய்யப்பட்டுள்ளது.

எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை.

குறிப்பு:

1. சாட்சிகள் யாரும் விசாரணைக் காலத்தில் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

2. விசாரணைக் காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தனர்.

3. காவல் துறையினருக்கு நடவடிக்கைச்சீட்டு வழங்கப்பட்டது.

BAVYA BALU

Judicial Magistrate No. II
Digitally signed by BAVYA BALU
Location: Madurantakam
Date: 2026.03.27 18:50:35 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
மதுராந்தகம்.